RECREATION

# அப்போதைக்கப்போது வந்து சேரும் நிகழ்ச்சிக்காக பதிவு செய்தலில் காலஅவகாசம் மாற்றம்

**மார்ச் 24 துவங்கி, அப்போதைக்கப்போது நிகழ்ச்சிகளுக்கு, அவை துவங்குவதற்கு 25 மணி நேரம் முன்னதாக பங்கேற்பாளர்கள் பதிவு செய்யலாம்.**

## அடிக்கடி கேட்கப்படும் கேள்விகள்

**அப்போதைக்கப்போது வந்து சேரும் நிகழ்ச்சி என்பது என்ன?**

அப்போதைக்கப்போது வந்து சேரும் நிகழ்ச்சி என்பது, நிகழ்ச்சிகளுக்கு செல்லும்போது மட்டுமே பணம் செலுத்தி கலந்துகொள்ளும் ஒரு தடவைக்கான நிகழ்ச்சிகளாகும்; அவை பல நாள் நடப்பவை கிடையாது. உதாரணமாக பொதுமக்கள் நீச்சல், பொதுமக்கள் பனிச்சறுக்கு மற்றும் "அப்போதைக்கப்போது" என குறிப்பிடப்படும் நிகழ்ச்சிகள் எனலாம்.

**அப்போதைக்கப்போது வந்து சேரும் நிகழ்ச்சிக்கு நான் எப்படி பதிவு செய்வது?**

குடியிருப்பாளர்களும் உறுப்பினர்களும் 25 மணி நேரம் முன்னதாக பதிவு செய்துகொள்ளலாம்; குடியிருப்பாளர் அல்லாதோர் ஒரு மணி நேரம் முன்னதாக செய்துகொள்ளலாம். Brampton.ca/registrationforprograms, எனும் வலைப்பக்கத்தில் ஆன்லைனில் அல்லது ஏதேனும் புத்துணர்வு மையத்திற்கு நேரில் சென்று அல்லது 311 ஐ அழைத்து பதிவு செய்துகொள்ளலாம்.

**நான் உறுப்பினராக இருந்தாலுமே கூட, அப்போதைக்கப்போது வந்து சேரும் நிகழ்ச்சிக்கு நான் பதிவு செய்தாகவேண்டுமா?**

உறுப்பினராக இருந்தாலுமே கூட தனக்கென ஒரு இடத்தை உறுதி செய்து கொள்வதற்கும், சரியான திட்டமிடலை உறுதி செய்வதற்கும், அதிகம் பேர் பதிவு செய்ய விழையும் பொழுதுபோக்கு நிகழ்ச்சிகளுக்கான அணுகலை நிச்சயப்படுத்திக் கொள்வதற்கும், முன்கூட்டியே பதிவு செய்வது பரிந்துரைக்கப்படுகிறது. பிரபலமான நிகழ்ச்சிகள் விரைவாக நிரம்பிவிடும் என்பதால், உங்கள் இடத்தைப் பிடித்துக்கொள்ள சீக்கிரமாகப் பதிவு செய்யுங்கள். இடம் இருந்தால் போகிறபோக்கில் வருபவர்களுக்கு இடமளிக்கப்படும்.

**அப்போதைக்கப்போது வந்து சேரும் நிகழ்ச்சிக்கு என்னால் வர முடியாவிட்டால் என்ன செய்வது?**

உங்கள் ஆன்லைன் கணக்கில் உள்நுழைவதன் மூலம் உங்கள் அப்போதைக்கப்போது வந்து சேரும் நிகழ்ச்சிக்கான முன்பதிவை ரத்துசெய்யவும். நிகழ்ச்சி தொடங்கும் நேரத்திற்கு ஒரு மணி நேரத்திற்கு முன்பே 311 மூலம் ரத்து செய்வது ஏற்றுக்கொள்ளப்படும். பங்கேற்பாளர்கள் 24 மணிநேர முன் அறிவிப்புடன் தங்கள் முன்பதிவை ரத்து செய்ய recreation@brampton.ca என்ற முகவரிக்கு மின்னஞ்சல் அனுப்பலாம்.

பொழுதுபோக்கு திட்டங்கள் மற்றும் சேவைகள் பற்றிய கூடுதல் தகவல்களுக்கு *brampton.ca/registration* என்ற வலைத்தளத்தைப் பார்வையிடவும்.

BRAMPTON